**சார்பு நீதிமன்றம், ஓமலூர்.**
**REA.137/2019**
**in**
**REP.60/2018**
**in**
**OS.110/2011**

நாள் : 27.09.2024

| | | | |
|---|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி: | : ம.சா.2 | ஜாதி | ------------- |
| பெயர் | கார்த்திக் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 6 ம் மனுதாரர். 1 ம் மனுதாரர் எனது தந்தை, அவர் இறந்துவிட்டார். அதற்கு பிறகு அரவது வாரிசுகளான 2 முதல் 6 மனுதாரர்கள் கட்சி சேர்க்கப்பட்டு இம்மனுவை நடத்துகிறோம். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து உண்மை என தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை**:- 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

இந்த கோரிக்கை மனு ஆரம்பத்தில் எனது தகப்பனார் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அவர் இறந்த பின்னிட்டு நாங்கள் கட்சி சேர்க்கப்பட்டோம். கோரிக்கை மனுவில் சர்வே எண். 72/2 ல் 2 ஏக்கர் 39 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.72/2 தான் பின்னிட்டு சர்வே எண்.72/2C மற்றும் 72/1A என மாறிவிட்டது என்றால் சரிதான். சர்வே எண்.72/2C ல் 1 ஏக்கர் 56 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.72/2C ல் 1 ஏக்கர் 46 செண்ட் நிலத்தினையும், பின்னிட்டு 10 செண்ட் நிலத்தையும் கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.72/2C ல் மொத்தமுள்ள 2 ஏக்கர் 39 செண்ட் நிலத்தில் நாங்கள் கிரயம் பெற்ற மொத்த நிலம் 1 ஏக்கர் 56 செண்ட் நிலம் போக மீதி உள்ள 83 செண்ட் நிலம் 1 ம் எதிர்மனுதாரர்/DH க்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நாங்கள் கிரயம் பெற்றுள்ள 1 ஏக்கர் 56 செண்ட் நிலம்போக மீதமுள்ள 83 செண்ட் நிலத்தை பொறுத்து எந்த உரிமையும் நானோ மற்ற மனுதாரர்களோ கோரவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த கோரிக்கை மனுவானது

எங்களால் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற நிலத்துக்காரர்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர்/DH நீதிமன்றத்தின் மூலம் கிரயம் பெற்ற மற்ற சொத்துக்களை பொறுத்து எங்களுக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

**(1ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையை 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தங்களுடையதாக ஏற்றுக்கொள்கிறார்கள்)**

<u>**மறுவிசாரணை**</u>:- இல்லை.

ஒப்பம்/- PW2
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்